அனுப்புகிறபோது கல்யாணம் ஆகாத சிறு வயசுப் பெண்களை அனுப்புவதால் குழந்தைகள் பெறுமல் எப்படி இருக்கவேண்டுமென்று குழந்தைகளைப் பெற்றவர்களுக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று சொல்லப்படுவதால் அவர்கள் பெரும் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். அது மட்டுமல்ல, கடுமையான கேள்விகளைக் கேட்பதால் அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறுகிறார்கள், இது யதார்த்த நிலை. ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த முறையிலே செய்யாமல் கருத்தரங்குகளையும், கான்பரன்சுகளையும், அதற்காக ஏற்படுத்தி டாக்டர்களையும் வைத்து இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் இருந்தால் அதை மாற்றியமைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. மருத்துவத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள்தான் அந்தப் பணிகளிலே அமர்த்தப்படுகிறார்கள். அவர்கள் அதற்காக பயிற்சி பெறுகிறபோது அதைப்பற்றிய பயிற்சிகள் எல்லாம் அவர்களுக்குத் தரப்படுகின்றது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், மருத்துவத் துறையில் பயின்றுகொண்டிருக்கின்ற நேரத்திலே கல்யாணம் ஆகாத நிலையில்தான் அவர்கள் பயில்கிறார்கள். செவிலியர்கள் ஹெல்த் விஸிட்டர்களாக பயிற்சியளிக்கப்படுவதுபோன்று ஒரு பயிற்சியை அவர்கள் பெற்றதற்குப் பிறகுதான் அந்தப் பணியிலே அமர்த்தப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பேறுகால மருத்துவ உதவியாளர்களுக்குக் குடியிருப்புகள்.

*வினா எண். 203—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் பேறுகால மருத்துவ (Maternity Assistants) உதவியாளர்களுக்கு குடியிருப்பு இல்லங்களை மருத்துவமனை எல்லைக்குள் கட்டும் திட்டத்தினை அரசு ஏதும் மேற்கொண்டுள்ளதா

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) இல்லை.

(ஆ) எழாது.

திரு. துரை முத்துச்சாமி : சென்ற ஆண்டு இதற்காகத் திட்டமிடப்பட்டதா ? எத்தனை வீடுகளில் இப்போது குடியிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 செப்டம்பர் 14

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள 383 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 188 ஆரம்ப சுகாதார நிலையங்களில் துணை செவிலியர் உள்பட அனைவருக்கும் குடியிருக்க வீடு கட்டப்பட்டுள்ளது. பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர், 75 ஆரம்ப சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் கட்டவும், 24 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருந்தகம் மற்றும் குடியிருப்பு இல்லங்கள் கட்ட செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கிறது. மொத்தமாகக் குறிப்பு வந்திருக்கிறது. தனித்தனியாகக் குறிப்பு அனுப்ப வேண்டுமென்று பொதுப் பணித்துறை கேட்கப்பட்டிருப்பதால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம்.

*வினு எண். 204— திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்களில் கிரல் ஏற்பட்டு, இடிந்து விழும் நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது ஆரம்ப சுகாதார மருத்துவமனை 1—12—1977 முதல் வாடகைக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு இயங்கி வருகிறது. பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவ இயக்குநர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான புதிய இடத்தை தேர்ந்தெடுக்கும்படி திருநெல்வேலி மாவட்ட நல்வாழ்வு அலுவலரை கேட்டு இருக்கிறார். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு தற்போது அந்த மருத்துவமனை வாடகை இல்லத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, புளியம்பட்டி என்ற முனிசிபாலிட்டி இருக்கிறது. அங்கு படுக்கை வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி இல்லை. மிகப் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. வாசுதேவநல்லூரில் உள்ள